இங்கே கூறியதை நான் மேலேயிருந்து கேட்டேன். இருந்தாலும் ஏமாற்றத்திற்கு உங்களை ஆளாக்கக்கூடாது என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி நிதியாக இப்பொழுது தரப்படுகிற *1* கோடியே *20* இலட்ச ரூபாய், *1* கோடியே *50* இலட்ச ரூபாயாகத் தரப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு *12* கோடி ரூபாய் செலவில் ஜீப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று மேலேயிருந்து கேட்டேன். கீழே வந்து நண்பர் வீராசாமியைக் கேட்டேன். அவர் வேறு சொன்னார். நான் தெளிவாகக் கேட்டது, நம்முடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் இங்கே பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்கு pocket money *30* ரூபாய் போதாது என்று சொன்னார். பேராசிரியர் என்னைக் கலந்து சொல்வதாக இங்கே குறிப்பிட்டார். அது *50* ரூபாயாகத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

7. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். *2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *2*) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). *2008* ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *2*) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் பற்றிய அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,